www.Padasalai.Net www.CBSEtips.in

**11** - ஆம் வகுப்பு **இரண்டாம் இடைபருவத் தேர்வு - 2023**

நேரம்: 1.30 மணி **வணிகவியல்** **2MM** மதிப்பெண் : 45

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 x 1 = 10

1. சுயநிதி குழுக்களுக்குக் கடன் அளிக்க ...... வேறுபட்ட முறைகள் உள்ளன. அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4
2. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே இணைப்பு சங்கிலியாக இருப்பது
   அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்
3. வியாபார இடைநிலையர்கள் ....வகைகளாகப் பிரிக்கலாம். அ) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு
4. நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ........ என்பர் அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்
   இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
5. நாடுகளுக்கிடையே சரக்கு மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக் கொள்ளப்பட்டால் அது ........... எனப்படும். அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்
   இ) மறு ஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு ஏற்றுமதி வியாபாரம்
6. STC யின் விரிவாக்கம் அ) மாநில பயிற்சி மையம் ஆ) மாநில பயிற்சி சபை
   இ) மாநில வணிக மையம் ஈ) மாநில வணிக கழகம்
7. சுங்கவரிகள் மற்றும வாணிபம் மீதான பொது ஒப்பந்தம் கையெழுத்தான நாள்
   அ) 30 அக்டோபர் 1947 ஆ) 29 அக்டோபர் 1947 இ) 28 அக்டோபர் 1947 ஈ) 26 அக்டோபர் 1947
8. அலுவல் சார்ந்த மூலதனம் என்பது அ) இந்திய ரிசர்வ் வங்கியின் அயல்நாட்டு நாணய மதிப்பு
   ஆ) அரசின் சிறப்பு எடுப்பு உரிமை இ) அ மற்றும் ஆ இரண்டும் ஈ) அயல்நாட்டு மூலதனம்
9. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு
   ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு இ) ஒப்புக் கொண்ட வாக்குறுதி ஈ) ஒப்பந்தம்
10. பட்டியல் 1 - இல் உள்ளவற்றை பட்டியல் 2 உடன் பொருத்திப் பார்த்து கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுதியிலிருந்து உங்கள் விடைகளை தெரிவு செய்க.

| | தொகுப்பு |
|---|---|
| i) முனைவு | ( 1 ) 2 (e) |
| ii) ஏற்பு | ( 2 ) 2 (h) |
| iii) உடன்படிக்கை | ( 3 ) 2 (b) |
| iv) ஒப்பந்தம் | ( 4 ) 2 (a) |

| தொகுப்பு | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 4 | 3 | 2 | 1 |
| இ | 2 | 3 | 1 | 4 |
| ஈ | 3 | 4 | 1 | 2 |

**II எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 17 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 x 2 = 10

11. மறு ஏற்றுமதி வியாபாரம் - விளக்குக.
12. தரகர் என்பவர் யார்?
13. மடங்கு கடையின் பொருள் யாது?
14. சட்டம் என்றால் என்ன?
15. இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன?
16. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
17. எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளே ஆனால் எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் அல்ல - விளக்குக.

**III எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். 24 கட்டாயமாக விடையளிக்கவும்.** 5 x 3 = 15

18. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.
19. சரக்காணையின் உள்ளடக்கங்கள் யாவை?
20. நடப்புக் கணக்கின் வரவுப் பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை?
21. சிறப்பங்காடியின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 3).
22. உடன்படிக்கை என்றால் என்ன?
23. ஒப்பந்த நிறைவேற்றத்தை யார் கோரலாம்?
24. தொலைபேசி சந்தையிடுகை - விளக்குக.

**IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 2 x 5 = 10

25. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? **(அல்லது)**
    ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
26. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பு இயல்புகளை குறிப்பிடு. ***(அல்லது)*** வாணிப சமநிலையின் சிறப்புக் கூறுகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**+1வணிகவியல் 2ஆம் பருவத்தேர்வு -மதுரை(மா) நவ 23**

1.(இ) 3
2.(அ) வியாபாரம்
3. ஆ) இரண்டு
4.(ஈ) சுற்றாடும் வியாபாரிகள்
5.(அ) பன்னாட்டு வியாபாரம
6. ஈ) மாநில வணிக கழகம்
7. அ) 30 அக்டோபர் 1947
8. இ) அ மற்றும் ஆ இரண்டும்
9. ஈ) ஒப்பந்தம்
10. ஆ) 4 3 2 1

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

**11. மறு ஏற்றுமதி வியாபாரம்:** ஒரு நிறுவனம், ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பொருட்களை மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மறுஏற்றுமதி வணிகம் என்று பெயர். எகா:- இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது மறுஏற்றுமதி வியாபாரம் ஆகும

**12. தரகர்:** மற்றவர்களுக்காக முன்னின்று பேரம் பேசி, வியாபாரத்தை இலாபக்கரமாக நிறைவேற்றி அதற்கெனக் கழிவு பெறும் நபரையே தரகர் என்பர். அவரது சேவைக்கு வழங்கப்படும் ஊதியம் "தரகு" ஆகும்.

**13. மடங்குக் கடை:** தயாரிப்பாளாகடைகள் (அ) இடைநிலையர்கள் தங்கள் நிர்வாகத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான கடைகளை அமைத்து தரமான பொருட்களை விற்பனை செய்யும் சில்லரை கடைகள் மடங்கு கடைகள் என்கிறோம். இதனை தொடர் பண்டகச்சாலைகள் எனவும் அழைக்கப்படுகிறது. எகா:- பாட்டா ஷீ கம்பெனி.

**14. சட்டம்:** வாழ்க்கையில் சரியான நடத்தைக்கும், சமுதாயத்தின் முறையான ஒழுங்கு முறைக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு விதியே சட்டமாகும்.

**15. இறக்குமதி வியாபாரம்:** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.
எகா:- இந்தியா வளைகுடா நாடுகளில் இருந்து பெட்ரோலியப் பொருட்களை இறக்குமதி செய்தலைக் கூறிக்கலாம்.

**16. நாணய உறுதி கடிதம்:** இறக்குமதியாளர் மீது, ஏற்றுமதியாளர் மாற்று முறை தன்னிடம் வரும் போது, அதற்குப் பணம் தருவதாக, இறக்குமதியாளரின் வங்கி அளிக்கும் உறுதிமொழி அடங்கிய கடிதமே நாணய உறுதி கடிதம் ஆகும். நன்கு அறிந்த இறக்குமதியாளருக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

**17. எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளே ஆனால் எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் அல்ல:** அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும். ஏனெனில் சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படுவது உடன்படிக்கை அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது. ஏனெனில் உடன்படிக்கையில் எல்லா ஒப்பந்தமும் உள்ளடங்கியது அல்ல.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

**18. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

- மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
- இவர்கள் பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
- ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
- பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
- இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
- சில்லறை வியாபாரிகளுக்கு இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
- உற்பத்தியாளர்களுக்கும் இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
- நகரங்கள், பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

**19. சரக்கு ஆணையின் உள்ளடக்கங்கள் யாவை?**

- அனுப்பப்பட்ட பொருளின் அளவு
- பொருளின் வடிவமைப்பு
- விலை
- கப்பல் ஏற்றுமதிக்கான தன்மை
- ஏற்றுமதி முறை
- விநியோக காலம்

கட்டணம் செலுத்தும் முறை

**20. நடப்பு கணக்கின் வரவு பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை?**

- பொருட்களின்ஏற்றுமதிகள்(கண்ணுக்குப் புலனாவது)
- கண்ணுக்கு புலனாகாத ஏற்றுமதிகள்.
- அயல்நாட்டில்செய்யப்பட்ட வங்கியியல் சேவைகள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- அயல்நாட்டு செய்யப்பட்ட காப்பீட்டு சேவைகள்.
- வெளிநாடுகளில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் கடன்களின் மீது பெறப்பட்ட வருமானங்கள்.
- அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளால், உள்நாட்டில் செய்யப்பட்ட செலவுகள்.

**21. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.( ஏதேனும் 3)** சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்.
பொருள்கள்யாவும் விலை, தரம் மற்றும் ரகம் வாரியாக, அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
வாடிக்கையாளர்கள் தேவையான பொருள்களை, தானே எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையினை செலுத்தி விட்டு, வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு. கடன் விற்பனை கிடையாது.
துறைவாரிப் பண்டக சாலை போன்று அமைந்திருப்பதால், ஒரே கூரையான கீழ் அனைத்து வகைப் பொருள்களையும், வாடிக்கையாளர்கள் வாங்க முடிகிறது.
இதை அமைக்க, அதிக முதலீடு தேவைப்படுகிறது.

**22. உடன்படிக்கை:** 2(e)ன் படி "ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழியின் தொகுதியும்" உடன்படிக்கை ஆகும.

**23. வாக்குறுதி பெறுபவர்:-** வாக்குறுதி பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தை கோர உரிமையுள்ளவர்.
**சட்டரீதியான பிரதிநிதி:-** சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தைக் கோரலாம்.
**மூன்றாவது நபர்:-** விதிவிலக்காக சில சூழ்நிலைகளில் அயலார் கூட நிறைவேற்றத்தைக் கோரும் உரிமை பெறுகிறார்.

**24. தொலை பேசிச் சந்தையிடுகை** விற்பவர்கள் அப்பொருள்களை வாங்கும் திறன் மிக்கவர்களை தொலைபேசியிலோ அல்லது கை பேசியிலோ தொடர்பு கொண்டு பொருட்கள் அல்லது சேவைகளைப் பற்றி விரிவாக எடுத்துரைப்பர்.
விருப்பமுள்ள வாடிக்கையாளர் பின் நேரடியாக விற்பனையகத்திற்குச் சென்று வாங்குவதையே தொலைப் பேசி சந்தையிடுதல் என்கிறோம்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள்**
ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
உள்நாட்டு உற்பத்தியாளர் நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.
உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.
ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்களை வாங்கப்படுகிறது.
உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.
இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

| 25 ஆ. அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|
| வரைவிலக்கணம் | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்படிக்கையாகும். | உடன்பாடு என்பது, மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதி மொழியும், உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும். |
| செயலாக்கத் தன்மை | அனைத்து ஒப்பந்தங்களும் செயல்படுத்த முடியும். | அனைத்து உறுதிமொழிகளும் செயல்படுத்த முடியாது. |
| பரஸ்பர உறவு | ஒப்பந்தம் என்பது, உடன்படிக்கையை உள்ளடக்கியது. | உடன்படிக்கையில், எல்லா ஒப்பந்தமும் உள்ளடக்கியது அல்ல. |
| செல்லக்கூடியது | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தமாகும். | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாதவையும் உடன்படிக்கை ஆகும். |
| சட்டபூர்வமான கடமை | அனைத்து ஒப்பந்தங்களிலும் சட்டபூர்வமான கடமை உள்ளன. | சட்டபூர்வமான கடமையானது அனைத்து உடன்படிக்கையிலும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**26.அ. துறைவாரிப் பண்டக சாலையின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.**

**பேரளவு அமைப்பு:-** அதிக முதலீடு செய்து, உருவாக்கப்பட்ட கூட்டுப்பங்கு நிறுமத்தின் இயக்குநர்கள் குழுவால் நிர்வகிக்கப்படும் பெரிய சில்லறை வியாபார நிறுவனம் துறைவாரிப் பண்டக சாலை ஆகும்.

**பல்பொருள் விற்பனை:-** மனிதனுக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும், ஓரே இடத்தில் "குண்டூசி முதல் வாகனம் வரை" விற்பனை செய்யப்படுவதால், நுகர்வோர் வேண்டியதை வாங்கிப் பயன்பெற முடியும். மேலும் ஓரே பொருளின் பலவகைகளும் இங்கு கிடைக்கும்.

**துறைகளின் ஒருங்கிணைப்பு:-** பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு வகையான பொருள்களை தனித்தனியாக விற்பனை செய்யப்படுகின்றன.

**வாங்கும் வசதிகள்:-** வாடிக்கையாளர்களுக்கு ஓய்வறைகள், சிற்றுண்டிச் சாலை, வாகனம் நிறுத்துமிடம், பொழுது போக்கு வசதிகள் போன்ற வசதிகள் வழங்கப்படுவதால், குடும்பமாக வந்து பொருள்களை வாங்க முடிகிறது.

**மையக் கொள்முதல்:-** அனைத்து வகைப் பொருள்களும், ஒரு மையத்தின் மூலம் நேரடியாக தயாரிப்பாளரிடமிருந்து, பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது.

**26.ஆ. வாணிபச் சமநிலையின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**

ஒரு நாடு மற்றும் உலகின் பிற நாடுகளுக்கு இடையேயான அனைத்து பொருளாதார பரிமாற்றங்களுக்கான முறையான பதிவு ஆகும்.

இது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது 12 மாத காலத்திற்கோ தயாரிக்கப்படுகிறது. அதாவது பொதுவாக 12 மாதங்கள்.

இது கண்ணுக்குப் புலனாகக் கூடிய மற்றும் கண்ணுக்கு புலனாகாத பெறுதல்கள் மற்றும் செலுத்தல்களை உள்ளடக்கியது.

இது நடப்பு கணக்கு மற்றும் மூலதன கணக்கில் பதிவு செய்யப்படும் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.

பொருளாதார நடவடிக்கைகள் இரட்டைப் பதிவு முறை கோட்பாட்டின் படி பதிவு செய்யப்படுகின்றன. அதன்படி பெறுதல்கள் வரவு பக்கத்திலும் செலுத்தல்கள் பற்று பக்கத்திலும் பதிவு செய்யப்படுகின்றன.

இது அயல்நாட்டு வாணிகத்தில் ஒரு நாட்டின் நிலையை எடுத்துக் கூறுகிறது.

பிற நாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையை விட, பெறுதல்கள் அதிகமாக இருக்கும் போது செலுத்தல் நிலை சாதகமான அல்லது உபரி நிலையை காட்டுகிறது. பிறநாட்டுக்குச் செலுத்த வேண்டிய தொகையை விட பெறுதல்கள் குறைவாக இருக்கும் போது அது பாதகமான அல்லது பற்றாக்குறை நிலையைக் காட்டுகிறது,

வெப்பநிலைமானி மனித உடல் வெப்பநிலையை காட்டுவது போல, செலுத்தல் நிலை நாட்டின் ஆரோக்கியமான பொருளாதார நிலையை அறிய பயன்படுகிறது. சாதகமான செலுத்தல் சமநிலை, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும், பாதகமான செலுத்தல் சமநிலை ஒரு நாட்டின் பொருளாதார பின்னடைவையும் குறிக்கிறது.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com